©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 224] CHENNAI, THURSDAY, AUGUST 1, 2013
Aadi 16, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தூத்துக்குடி மாவட்டம்**

**தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், கட்டாலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ஊநி5/2459/2012)*

**No. VI(2)/149(a-1)/2013.**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், கட்டாலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி த. சின்னத்தாய் என்பவர் தனது சுய இலாபத்திற்காகவும், பொது நன்மைக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலும் முறைகேடுகள் புரிந்து அரசு விதிமுறைகளை மீறியும், ஊராட்சிக்கு ரூ. 6,01,792/– நிதியிழப்பை திட்டமிட்டு ஏற்படுத்தியும், அதிகார துஷ்பிரயோகமும் செய்துள்ளதால் பொது நன்மையைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11 இல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், உளத்தேர்வின்படியும் கட்டாலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி த. சின்னத்தாய் என்பவரை நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது. இந்த பதவி நீக்க அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1) இன்படி ***தமிழ்நாடு மாநில அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி,
**2013 ஜூலை 26.**

**ஆஷிஷ் குமார்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

**தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், ஆசூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ஊநி5/3556/2012)*

**No. VI(2)/149(a-2)/2013.**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம், ஆசூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி செ. சண்முகத்தாய் என்பவர் தனது சுய இலாபத்திற்காகவும், பொது நன்மைக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலும் முறைகேடுகள் புரிந்து அரசு விதிமுறைகளை மீறியும், ஊராட்சிக்கு ரூ.1,05,82,902/– நிதியிழப்பை திட்டமிட்டு ஏற்படுத்தியும், அதிகார துஷ்பிரயோகமும் செய்துள்ளதால் பொது நன்மையைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11 இல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், உளத்தேர்வின்படியும் ஆசூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து திருமதி செ. சண்முகத்தாய் என்பவரை நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது. இந்த பதவி நீக்க அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1) இன்படி ***தமிழ்நாடு மாநில அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி,
2013 ஜூலை 26.

**ஆஷிஷ் குமார்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.